
குருவே துணை
வாழ்க வையகம்
வாழ்க வளமுடன்
வேதாத்திரிய பார்வையில்
தாயுமானவரின்
மலைவளர்க் காதலி
அருள்நிதி
மன்னார்குடி
பானுகுமார்.
• டிசைன் ~ தவம் ஆர்ட்ஸ் •

# வேதாத்திரியப் பார்வையில்
# தாயுமானவரின் மலைவளர்க் காதலி

அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

## இதனுள்ளே

1. அகத்தவப்பயன்கள்
2. மட்டிலே மனது செல நினது அருளும் அருள்வையோ?
3. நினைவெல்லாம் ஞானமயமாய்
4. தொண்டர்பணி செய்வது என்றோ?
5. அடியர் நாமமே நான் உச்சரிக்க வசமோ
6. எனையாள வல்லையோ?
7. வினைஏறு மெய்எனும் தொக்கினுள் சிக்கி
8. வித்தையை வியந்து அருள்வையோ

## 1. அகத்தவப்பயன்கள்

இறைவன் அன்புக்கு அடிபணிந்தவன். கறந்த பாலைவிட தூய்மையான அன்பை நாம் அவன் மீது செலுத்தும்போது நாம் அவனுக்கு மிக முக்கியமான பக்தன் ஆகிறோம்.

கோடானு கோடி மக்களை பெற்றிருக்கும் இறைவனுக்கு எல்லோரும் ஒன்றுதான்.

இறைவனை நோக்கி வரம் வேண்டி தவம் புரிபவன் பக்தியில் தூய்மையாகவும் உள்ளத்தில் தெளிவையும் கொண்டால் போதும்.

வேண்டியதை இறைவன் அப்படியே வழங்கி அருள்புரிவார்.

இரண்டு பக்தர்கள் இறைவனை வேண்டி அடைந்த பலன்களைப் பார்க்கலாம்.

முதலாமவன் பெரும் கஞ்சன். சாப்பிடும் போது கூட வயிறார சாப்பிட மாட்டான்.

செல்வம் நிறைந்திருந்தாலும் வயிற்றுக்கே வஞ்சனை செய்பவன்.

ஆடைகள் அணிவதிலும், இன்ன பிற செலவுகளையும் கூட வழித்து வழித்து செய்வான். எச்சில் கையால் காகம் கூட ஓட்டாதவன்.

பெட்டி நிறைய செல்வம் வழிந்த நிலையில் அவனுக்கு விபரீத ஆசை உருவானது.

வீடு முழுக்க தங்கத்தாலும் வைரத்தாலும் இழைத்து அதில் வாழ்ந்தால் எப்படியிருக்கும்.

கற்பனையைத் தினமும் கனவுகளாகக் கண்டான். கனவை நனவாக்க என்ன செய்வது என்று யோசித்தான்.

நம் கனவையெல்லாம் கடவுளால் மட்டுமே தீர்க்க முடியும் என்று இறைவனை நினைத்து தவம் இருக்க முடிவு செய்தான்.

ஏற்கனவே கஞ்சக் கருமி என்பதால் அவனுக்கு தவம் இருப்பது ஒன்றும் பிரச்னையாக இருக்கவில்லை.

கடவுள் ஒன்றும் அறியாதவரா... அவனுக்குத் தகுந்த பாடம் கற்பிக்க வேண்டும் என்று அவனை அதிகம் காக்க வைக்காமல் அவன் முன் தோன்றினார்.

அவனுக்கு ஒரே சந்தோஷம்.“என்ன வேண்டும் கேள்.ஆனால் ஒரு வரம் மட்டுமே கொடுப்பேன்.அதை மீண்டும் மாற்றித்தர இயலாது.உனக்கு ஒரு நிமிடம் அவகாசம் என்றார்.

அவன் மனம் முழுக்க தங்கமாக இருந்ததால், “நான் எந்தப் பொருளைத் தொட்டாலும் அது உடனே தங்கமாக மாறவேண்டும்” என்றான்.“நன்றாக யோசித்தாயா” என்றார் இறைவன்.



“என்ன சாமி இதைத் தானே எந்த நேரமும் நினைச்சுட்டிருக்கேன்

உங்களுக்கு எந்தவிதமான சந்தேகமும் வேண்டாம் நீங்க இந்த வரம் மட்டும் கொடுங்க சாமி” என்றான்.

புன்னகைத்த கடவுள் விதி வலியது என்று சொல்லி அப்படியே ஆகட்டும் என்று வரமளித்து மறைந்தார்.

நம்மாள் வீட்டுக்குப் போனான். வீட்டுக்குப் போகும்போது கூட வழியில் யாரையும் தொடவில்லை.

தங்கம் ஆகிவிட்டால் என்ன செய்வது என்று தனித்து வீட்டுக்கு வந்தான்.

கடவுள் உண்மையிலேயே வரம் கொடுத்துவிட்டாரா என்று வீட்டில் இருந்த உப்பு டப்பாவை தொட்டான். தங்கமாக மின்னிற்று.

உற்சாகத்தில் மனைவியைக் கட்டிப்பிடித்தான் அவளும் தங்கமாகிவிட்டாள்.

வெளியே இருந்து ஒடி வந்த குழந்தை இவனைக் கண்டதும் அப்பா என்று தோள் மீது எம்பியது.

பதட்டத்தில் இவன் தள்ளிவிட குழந்தையும் தங்கமாயிற்று.

“ஐயோ தப்பு செய்து விட்டேனே... வேண்டியதையும், தேவைக்கும் மட்டுமே தங்கமாக்க செய் என்றல்லவா கேட்டிருக்க வேண்டும். .

இனி நம்மால் தண்ணீரைக் கூட குடிக்க முடியாதே.இனி என்ன செய்வேன்..பகிர்ந்து கொடுக்காத நமக்கு பகவான் கொடுத்த இந்தத் தண்டனை தேவைதான் என்று நொந்துகொண்டான்.

இனி அவன் என்ன ஆனான் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை..

இரண்டாமவன் வறுமைக்கு பிறந்தவன்.சோறு என்ற வார்த்தைக் கூட செல்வந்தர்களுக்குத்தான் என்று நினைப்பவன்.

எப்படியும் பட்டினியில்தான் இருக்கிறோம். கடவுள் காரணமின்றி நம்மை படைத்திருக்க மாட்டார். பசியால் போகிற உயிர் பகவானுக்காகவாது போகட்டும் என்று தவமிருந்தான்.

இவனது நிலையைக் கண்டு மனமிறங்கிய இறைவன் இவன் முன் தோன்றி முதலாமவனிடம் சொன்னது போலவே இவனிடம் ஒரு வரம் மட்டும் என்றார்.

இவனும் சரி என்று ஒப்புக்கொண்டு நான்... 10 அடுக்கு மாளிகையில் என் மனைவி தங்கக் கிண்ணத்தில் என் மழலைச் செல்வத்துக்கு உணவூட்டுவதை அனுதினமும் பார்த்து ரசித்து என் உழைப்பை உலகுக்கு நிரூபிக்க வேண்டுமென்று கேட்டான்.

அவனது பக்தியையும், அறிவையும் மெச்சிய கடவுள் அப்படியே ஆகட்டும் என்று வரமளித்து மறைந்தார்.

பதியுண்டு, நிதியுண்டு, புத்திரர்கள், மித்திரர்கள்,
பக்கம் உண்டு எக்காலமும்
பவிசுண்டு, தவிசுண்டு, திருஷ்டாந் தம் ஆகயம்
படர்எனும் திமிரம் அணுகாக்

கதி உண்டு, ஞானம்ஆம் கதிர்உண்டு சதிர்உண்டு
காய சித்திகளும் உண்டு
கறை உண்ட கண்டர்பால் அம்மைநின் தாளில்
கருத்து ஒன்றும் உண்டாகுமேல்

நதி உண்ட கடல் எனச் சமயத்தை உண்டபர
ஞான ஆனந்த ஒளியே
நாதாந்த ரூபமே! வேதாந்த மோனமே!
நான் எனும் அகந்தை தீர்த்து என்

மதிஉண்ட மதிஆன மதிவதன வல்லியே!
மதுசூ தனன் தங்கையே
வரைரா ஜனுக்கு இருகண் மணியாய் உதித்தமலை
வளர்காத லிப்பெண்உமையே. (ஞாக.பா.578)

- நதிகளை தன்னதத்தே உள்வாங்கிக் கொள்ளும் கடல் போல சமயங்கள் அனைத்தையும் உள் வாங்கிக் கொண்ட மேலான அறிவுமயப் பேரின்பப் பேரொளியே!
- நாத தத்துவத்தையும் கடந்த உருவமே!
- வேத முடிபாய் விளங்கும் மௌனமே!
- "நான்" என்னும் தன்முனைப்பை நீக்கி, தற்போதம் அறச்செய்த, பேரறிவாய் விளங்கும், சந்திரன் போன்ற முகப்பொலிவு பெற்ற வல்லிக்கொடி போன்ற விளங்கும் உமையே!
- நாராயணனுக்குத் தங்கையே!
- இமையமலை அரசனுக்கு கண்ணின் மணிபோல் வந்துதித்தவளும், மலையில் வளர்ந்தவளும், பெற்றோருக்கு விருப்பம் மிக வளர்ந்த பெண்ணுமாகிய பார்வதி தேவியே!
- விடக்கறை பொருந்திய கண்டம் உடையவரின் தேவியாகிய நினது திருவடியில் சிந்தை செல்லுமாயின்.
- இருக்க இடம் கிடைக்கும்.
- செல்வம் கிடைக்கும்.
- பிள்ளைகளும் நண்பர்களும் உறவினர்களும் கிடைப்பார்கள்.
- எப்பொழுதும் திறமை பளிச்சிடும்.
- நல்ல உறக்கம் கிடைக்கும்.

- உண்மையாக, எமதூதர் என்னும் அறியாமை இருள்விலகி, வீடுபேறு கிடைக்கும்.
- ஞான ஒளி உண்டாகும். உடம்பு அழியாத தன்மை பெறும். மேலும் பல மேலான தகைமைகளும் வந்துசேரும்.

## அகத்தவப்பயன்கள் – வேதாத்திரியம்

"அறிவு உயிரை நோக்கும் அகத் தவத்தால்,

ஐந்துபுலன் வென்று ஆட்சி யேறும்.
அறிவின் ஆற்றல் பெருகும். அகன்று விரிந்து
ஆராயும்நட்பும் ஓங்கும்.
அறிவு தன்னிலை உணரும் அந்நிலையில்,
அதுவே மெய்ப் பொருளாய் நிற்கும்!
அறிவு உயர்வுக்கேற்ப அன்புகருணை ஈகை
தொண்டிவை தன்னியல்பாய் ஓங்கும். (ஞாக.பா.1494)

தாயுமானவர் வேதாத்திரியார் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 2.மட்டிலே மனது செல நினது அருளும் அருள்வையோ?

சீடன் ஒருவன் தன்னுடைய குருவிடம் தன் மனதில் இருந்த நெடுநாள் சந்தேகத்தை கேட்டான்.

“குருவே! கடவுளை காண முடியுமா?”

சீடனின் கேள்விக்கு பதிலளிக்க விரும்பிய குரு, ஒரு பாத்திரத்தில் தண்ணீரையும், கையில் சிறிது உப்பையும் எடுத்தார். கையில் இருந்த உப்பை சீடனிடம் காட்டி, “இந்த உப்பை உன்னால் பார்க்க முடிகிறதா? என்றார்.



“ஆம் பதிலளித்தான் சீடன்.

இப்போது குரு கையில் இருந்த உப்பை, தண்ணீர் நிரம்பிய பாத்திரத்தில் போட்டு, கலக்கி விட்டார்.

“இப்போது உன்னால் உப்பை பார்க்க முடிகிறதா?”

சீடனிடம் இருந்து “பார்க்க முடியவில்லை என்ற பதில் வந்தது.

“அப்படியானால் இந்த தண்ணீரில் உப்பு இல்லையா? குரு கேட்டார்.

“உப்பு தண்ணீரோடு கலந்துவிட்டது. அதனால் கண்களால் காண முடியவில்லை என்றான் சீடன்.

இப்போது குரு விளக்கத் தொடங்கினார், “எப்படி உப்பு இருந்தும், அதை கண்களால் காண முடியவில்லையோ அதேபோலத் தான், கடவுள் பிரபஞ்சத்தில் எல்லாவற்றிலும் இரண்டறக் கலந்திருக்கிறார். அவரை கண்களால் காண முடியாது.”

விளக்கமளித்த குரு, உப்பு கலந்த தண்ணீர் இருந்த பாத்திரத்தை சூடாக்கினார். பாத்திரத்தில் இருந்த நீர் முழுவதும் வற்றி, உப்பு மட்டும் மீதம் இருந்தது.

“இப்போது உப்பை பார்க்க முடிகிறதா?”

“ஆம்.. பார்க்க முடிகிறது”

“தண்ணீரில் உப்பு கலந்தபோது உப்பை காண இயலாததைப் போல, கடவுள் இந்த உலகத்தில் இரண்டறக் கலந்திருப்பதால் அவரைக் காண முடியாது. அதே வேளையில் நம்முடைய உலகப்பற்று குறையும்போது, மனதில் இருந்து உலகியல் எண்ணங்கள் வற்றி மனம் தூய்மை நிலையை அடையும் போது, நம் ஐம்புலன்களும்

கட்டுப்படும்போது, உலகத்தில் இரண்டற கலந்திருக்கும் இறைவன் தனியாக பிரிந்து நமக்குக் காட்சி தருவார். அப்போது கடவுளை காணலாம்.”

குருவின் விளக்கத்தால், சீடனின் மனம் தெளிவு பெற்றது.

தெட்டிலே, வலியமட மாதர்வாய் வெட்டிலே,
சிற்றிடையி லே நடையிலே
சேலஒத்த விழியிலே, பால் ஒத்த மொழியிலே,
சிறுபிறை நுதற்கீற்றிலே

பொட்டிலே, அவர்கட்கு பட்டிலே புனைகந்த
பொடியிலே, அடியிலே, மேல்
பூரித்த முலையிலே, நிற்கின்ற நிலையிலே
புந்திதனை நுழைய விட்டு

நெட்டிலே, அலையாமல். அறிவிலே, பொறையிலே,
நின் அடியர் கூட்டத்திலே.
நிலைபெற்ற அன்பிலே மலைவு அற்ற மெய்ஞ்ஞான
ஞேயத்திலே , உன்இருதாள்

மட்டிலே மனது செல நினது அருளும் அருள்வையோ?
வளமருவு தேவை அரசே!
வரைராஜனுக்கு இருகண் மணியாய் உதித்தமலை
வளர்காதலிப் பெண் உமையே. (ஞாக.பா.579)

- வளமை மிகுந்த தேவை” என்னும் நகருக்கு அரசியே!

- இமயமலை அரசனுக்கு கண்ணின் மணிபோல் வந்து உதித்தவளும், மலையில் வளர்ந்தவளும், பெற்றோருக்கு விருப்பம் மிக வளர்ந்த பெண்ணுமாகிய பார்வதி தேவியே!
- வன்மையும் இளமையும் உடைய மகளிரது வஞ்சனையிலும், சொல் திறமையிலும், சிறிய இடையிலும், நடையிலும், கெண்டை மீன் போன்ற கண்களிலும்,
- பால் போன்ற இனிய மொழியிலும், பிறை போன்ற நெற்றியிலும், நெற்றிப் பொட்டிலும், அவர் உடுத்தும் பட்டாடையிலும்,
- பூசுகின்ற மணமுள்ள பொடியிலும், காலடியிலும், மேலே பருத்து விளங்கும் முலையிலும் ஆக இவ்வாறு அவர் பலவிதமாக அழகுகாட்டி நிற்க,
- அவரது நிலையில், அறிவினை மயங்க விட்டு.மனம் போன போக்கில் அலைந்து திரியாமல். அறிவிலும் பொறுமையிலும் நினது அடியார் திருக் கூட்டத்திலும், நிலைத்த அன்பிலும், இயக்கம் இல்லாத மெய்ஞ்ஞான உண்மையிலும், ஆக உனது திருவடி இணையிலே மனம் செல்லுமாறு, நினது திருவருளை என்மீது வைப்பாயோ?

இறைநிலையில் மனம் செல்ல என்ன செய்ய வேண்டு ம். மு த லிய மனதை அறிந்து கொள்ள வேண்டும். பிறகு அகத்தவம் இயற்ற வேண்டும் என்கிறது  வேதாத்திரியம்.

"மனவளக்கலை" பயிற்சி தான் உலகுக்கு அமைதி ஊட்டவல்லது : "முதலில் மனதை அறிய வேண்டும். மனதின் மதிப்பை அறிய வேண்டும். அதன் பலஹீனத்தையும் தெரிந்து கொள்ள வேண்டும். மனம் இழந்துவிட்ட அதனது பெருமையை மீட்கின்ற முயற்சியும் வேண்டும். அதற்கு வழி வகுத்து உறுதுணையாக நிற்பதுதான் இந்த 'மனவளக்கலை' பயிற்சிமுறையாகிய எளிமைப்படுத்தப்பட்ட

'குண்டலினியோகம்' (□□□□□□□□□□ □□□□□□□□□ □□□□) ஆகும்.

மனதிற்கு தூய்மை ஊட்டுவது, மனதின் ஆற்றலையும் பெருக்குவது தான் இந்த "மனவளக்கலை" பயிற்சி முறை.

மனதின் குறைகளைப் போக்கவும் நல்வழியில் தீர்மானமாக நிற்கின்ற சுயபலத்தை மனதிற்கு ஊட்ட ஒரு பயிற்சித்திட்டம் வேண்டும்.

மனம் தன்னைத்தானே உணர்ந்து, உயர்த்திக் கொள்ள வேண்டும். அது மனதின் கையில்தான் உள்ளது.

மனம் தன் மூலமான இறைநிலையை எய்தினால் அறிவாகிறது. அந்நிலையைப் பெற்ற மனதினைக் கொண்ட மனிதனும் தெய்வமும் தரத்தில் ஒன்றே. இதைத் தான் "மனவளக்கலை" பயிற்சியின் மூலம் போதிக்கிறோம்.

மனமானது உயிர், உடல் இவற்றோடு எந்த அளவுக்கு ஒற்றுமையாக இயங்குகின்றதோ அந்த அளவுக்குத்தான் மனிதனின் அமைதி நிர்ணயிக்கப்படுகிறது. மனதின் இயக்கம் உடலையும் உயிரையும் பாதிக்கிறது.

உயிரோட்டத்தில் ஏற்படுகின்ற குழப்பம் உடலையும், மனத்தையும் பாதிக்கிறது. இந்தச் சீர்கேடான நிலையை மாற்றி மனம், உயிர், உடல், இம்மூன்றிலும் ஒற்றுமையான இயக்கத்தைப் பாதுகாக்க ஏற்ற ஒரு சாதனம் "மனவளக்கலை" பயிற்சி ஆகும்.

.

மனதை அறிந்து கொண்ட பின், அதன் மூலத்தையும் நன்கு விளங்கிக் கொண்டு வேண்டாத பழக்கத்தையும், தேவையில்லாதவற்றையும் ஒதுக்குவதற்கு மனதினால் முடிகிறது.

நல்லதையெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும். அவற்றைச் செயலில் கொண்டு வரவேண்டும். சிந்திக்கவும், செயல்படுத்தவும் அறிவுக்கூர்மை வேண்டும்.

வாழ்க்கையை முறைப்படுத்திக் கொள்ள நல்லறிவும் மனிதன் மனிதனாக வாழவும் மூலகாரணமாக உள்ள மனதைப் பற்றிய அறிவு வேண்டும்.
எனவே, மனதைப் போற்றி, அதன் தூய்மையைக் காத்து ஆற்றலைப்பெருக்கி அதன் நுட்பத்தை அறிய ஆர்வம் கொள்ளுங்கள்.
"மனவளக்கலை" பயிற்சி தான் உலகுக்கு அமைதி ஊட்டவல்லது.

மனித குலத்தில் காணுகின்ற கேடுகள் அத்தனைக்கும் இது ஒன்றே மருந்து.

எனவே உலகம் முழுவதும் பரப்புவதற்கு அகத்தவம் பயின்று, தத்துவ விளக்கத்தின் மூலம் உங்களைத் தயார்படுத்திக் கொள்ளுங்கள். தவம் (□□□□□□□□□□ □□□□□□□□□ □□□□), தற்சோதனை (□□□□□□□□□□□□□) மற்றும் குணநலப்பேறு பெற்று முழுமைப்பேறு (□□□□□□□□□□) அடையத் தகுதியாக்கிக் கொள்ளச் சிறந்த "மனவளக்கலை" பயிற்சியை மேற்கொண்டு சிறப்பாக வாழுங்கள்."

மனிதனும் தெய்வமே

"மனமது இயற்கையின் மாபெரும் நிதியலோ
    மனதைத் தாழ்த்திட மயக்கத்தால் துன்பமே
மனதை உயர்த்திட மட்டிலா இன்பமே
    மனதிலே உளஎலாம் மற்றெங்கே தேடுவீர்;
மனம் புலன் உணர்வில் மயங்கிட மாயையாம்
    மனம் உயர் வெளியினில் மருவித் தோய்ந்திட
மனம் விரிந்தறிவெனும் மாபதம் எய்திடும்
    மனம் அறிவாகிய மனிதனும் தெய்வமே.". ."(ஞாக.பா.)

"ஒன்றி ஒன்றி நின்று அறிவைப் பழக்க
    உறுதி, நுட்பம், சக்தி இவை அதிகமாகும்
அன்று அன்று அடையும் அனுபவங்கள் எல்லாம்
    அறிவினிலே நிலைத்துவிடும் ஆழ்ந்து ஆய்ந்து
நன்று என்று கண்டபடி – செயல்கள் ஆற்றும்

நற்பண்பு புலன்களுக்கு அமைந்து போகும்.
என்றென்றும் கருவிடத்தே அறிவை ஒன்றும்
இயற்கைமுறைச் சிறப்புடைத்து ஈதே தவமாம்."(ஞாக.பா.1473)

தாயுமானவர் வேதாத்திரியார் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 3. நினைவெல்லாம் ஞானமயமாய்

அரசன் ஒருவனுக்கு ஞானம் பெற வேண்டும் என்ற சிந்தனை தோன்றியது. நாட்டை தன்னுடைய மகனிடம் ஒப்படைத்து விட்டு ஞானம் பெறுவதற்கான வழியைத் தேடிப் புறப்பட்டான்.

ஞானத்தில் தெளிவு பெறுவதற்காக பல மதங்களையும், பல தத்துவங்களையும், பல சமயங்கள் கூறும் சடங்குகளையும் பற்றி விரிவாக அலசி ஆராய்ந்தான்.

உருவ வழிபாடு, அருவ வழிபாடு, வேள்வி, யாகம் போன்றவற்றை விளங்கிக் கொள்ள, அவற்றில் பல வழிகள் சொல்லப்பட்டிருந்தன.

ஆனால் ‘ஜென்’ தத்துவம் பற்றி மட்டும் சரிவர எதிலும் விளக்கப்படவில்லை.

எனவே அந்த அரசன், யாராவது ஒரு ஜென் குருவை சந்தித்து, தன்னுடைய சந்தேகத்திற்கான விளக்கத்தைக் கேட்டுப் பெறுவது என்று முடிவு செய்தான்.

பலரிடம் விசாரித்ததில், அனைவரும் ஒரு ஜென் குருவைப் பற்றி பெருமையாகக் கூறினர். ஆகையால் அந்தக் குருவிடமே தன்னுடைய சந்தேகத்தை கேட்க அரசன் முடிவு செய்தான்.

அவன் சென்ற வேளையில், அந்தக் குரு வெறுமனே அமர்ந்து

கொண்டு இருந்தார். அரசன் குருவை வணங்கினான்.

‘குருவே! எனக்கு ஜென் தத்துவம் புரியவில்லை. அதைத் தெரிந்து கொள்ள ஆவலாய் இருக்கிறது. அதனை எனக்கு விளக்கமாகச் சொல்ல வேண்டும்’ என்று கேட்டான்.

அதைக் கேட்டதும், ‘ஜென் தத்துவம் என்ன சொல்கிறது தெரியுமா?’ என்று ஆரம்பித்தவர், ‘போய் சிறுநீர் கழித்து விட்டு வருகிறேன்’ என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார்.

மன்னனுக்கு ஒரு மாதிரியாகி விட்டது. ‘சே... என்ன இது? இவரைப் பற்றி எவ்வளவு பெருமையாகக் கூறினார்கள். அதை நம்பி இவரிடம் இருந்து எவ்வளவு பெரிய விளக்கத்தை எதிர்பார்த்தோம். இவர் என்னவென்றால், பேசிக் கொண்டிருக்கும்போதே சாதாரணமாக சிறுநீர் கழிக்கப் போவதாகச் சொல்லிச் சென்றுவிட்டாரே’ என்று மனதிற்குள் நினைத்தான். இருந்தாலும் எதுவும் பேசாமல் அமைதியாக இருந்தான்.

சிறு நேரத்தில் திரும்பி வந்த குரு, ‘என்ன புரிந்ததா?’ என்று மன்னனைப் பார்த்து கேட்டார்.



ஏற்கனவே அதிருப்தியில் இருந்த அரசனுக்கு, எதுவுமே சொல்லாமல் புரிந்ததா? என்று குரு கேட்டது அதிர்ச்சியை அளித்தது. என்ன ஏதென்று அறியாமல் திருதிருவென்று விழித்தான் மன்னன்.

குரு இப்போது சொன்னார். ‘அரசனோ, அறிஞனோ, அறிவிழந்தவனோ.. ஏன் நானாக இருந்தாலும் சரி... சிறுநீர் கழிக்காமல் இருக்க முடியுமா? அதைச் செய்துதானே ஆக வேண்டும்? அதுவும் அவரவர்தானே அதைச் செய்தாக வேண்டும்?

எனக்குப் பதில் உன்னை அனுப்ப முடியுமா என்ன? என்று கேள்வி எழுப்பினார்.

இப்போது மன்னனுக்கு புரிந்து விட்டது. அவனுக்கு ஞானம் வந்தது. அவரவர் வாழ்வு என்பது அவரவர் கையில். அதை எவரிடமும் தள்ள முடியாது. அதுதான் ஜென் தத்துவம்.

உபதேசங்கள் வெறும் அடையாளங்கள்தான். அவை எதையும் நமக்கு அளிப்பதில்லை. பசி, தூக்கம் போல ஞானமும் ஓர் உணர்வு.

அதை எவரும், எவரிடம் இருந்தும் பெற முடிவதில்லை. தன் வாழ்வைத் தானே வாழ்வதன் மூலம்தான் அனுபவம் பெற முடியுமே தவிர, பிறர் அனுபவங்களைக் கொண்டு, நாம் ஞானம் பெற முடியாது.

பூதம் முதல் ஆகவே நாதபரி யந்தமும்
பொய் என்று எனைக் காட்டி என்
போதத்தின் நடுவாகி அடிஈறும் இல்லாத
போகபூ ரண வெளிக்குள்

ஏதும் அற நில் என்று உபாயம் வைத்து நினைவு
எல்லாம் செய் வல்லசித்தாம்
இன்ப உரு வைத்தந்த அன்னையே! நின்னையே
எளியேன் மறந்து உய்வனோ?

வேதமுதல் ஆனநல் ஆகமத் தன்மையே
விளக்கும்உள் கண்இலார்க்கும்.
மிக்கநின் மகிமையைக் கேளாத செவிடர்க்கும்
வீறுவா தம் புகலுவாய்

வாதநோ யாளர்க்கும் எட்டாத முக்கணுடை
மாமருந்துக்கு அமிர்தமே!
வரைராஜனுக்கு இருகண் மணியாய் உதித்தமலை
வளர்காதலிப் பெண் உமையே. (ஞாக.பா.580)

- வேதம், ஆகமம் முதலியவற்றை விளக்கிக் கூறும் ஞானக் கண் இல்லார்க்கும்,
- மிகுந்த நினது பெருமைகளைக் கேட்டு அறியாத செவிடர்களுக்கும்.
- பொருளற்ற வீண் பேச்சுப் பேசும் விதண்டாவாதம் செய்பவர்க்கும்,
- காண அரிய மூன்று கண்களுடன் விளங்கும் பிறவி நோய்க்கு மருந்தாக விளங்கும் எம்பெருமானுக்கு அமுதம் போன்றவளே!
- இமையமலை அரசனுக்கு கண்ணின் மணி போல் வந்த உதித்தவளும்,
- மலையில் வளர்ந்தவளும், பெற்றோருக்கு விருப்பம் மிகுமாறு வளர்ந்த பெண்ணும் ஆகிய பார்வதி தேவியே!
- ஐம்பூதங்கள் முதல் நாதம் ஈறாகச் சொல்லப்பட்ட தத்துவங்கள் அனைத்துப் பொய்.
- எனவே. சுட்டிக்காட்டி, என் அறிவிலே வந்து தங்கி.
- தொடக்கமும் முடிவும் இல்லாத முழுமையாம் வெளிக்குள்,
- நிலையில்லாத பொருள்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு, ஏகமாய் நில் என்று, ஒரு முறைமையை அமைத்துத் தந்து,
- நினைவெல்லாம் ஞானமயமாய், இன்ப உருவைத் தந்து அருளிய தாயே!
- நின்னை எளியேனாகிய நான் மறக்கவோ, மறந்து உய்யவோ முடியுமோ?

## ஞான வாழ்வு – வேதாத்திரியம்

யாரும் ஞானத்திற்காக தன் வாழ்வை அர்ப்பணிக்க தேவையில்லை; காஷாயம் தரித்து காடேக வேண்டியதில்லை; வாழ்வதற்குத் தான் ஞானம் பயன்படவேண்டும்" என்ற உண்மையை விளக்க முற்பட்டேன்.




விஞ்ஞானம் இன்று நம்மிடம் மிகுந்திருக்கலாம். அதெல்லாம் புலன்களுக்கான உப கருவிகளைத் தான் உண்டாக்க பயன்படுத்தப்பட்டது.

உன்னை நீ யார் என்று தெரிந்து கொள்ள வேண்டுமாயின் அதற்கு எந்த உபகருவியும் பயன்படாது.

நீ உன் உள் ஒடுங்கித்தான் பார்த்தாக வேண்டும். இப்பயிற்சி பகுத்தறிவோடு தொகுத்துணர்வு என்றும் சிறப்பை அளிக்கும்; அறிவு விரிந்த நிலையில் ஒவ்வொரு செயலையும் திறமையோடு ஆற்றி ஆற்றி வெற்றி பெறும்.

ஆகவே தான் செய்யும் ஒவ்வொரு செயலும் மற்றவர்களைப் பாதிக்கும் என்பதையும் தன்னியக்கம் தொடர்பியக்கம், பிரதிபலிப்பு இயக்கம், எதிரியக்கம், விளைவு ஆகியவை மூலம் தன் செயலின் பயன் தன்னையே நோக்கித் திரும்பி வரும் என்ற பேருண்மையும், காரண காரிய விளக்கமும் மனத்திற்கு தெளிவாகப் புரியவரும்.

ஆக மனம், அதற்கு மூலமானது உயிர், அதற்கும் மூலமான இருப்பு நிலை மெய்ப்பொருள், என்ற உண்மை விளக்கம் பெற்றால் தான், தன்னிடம் பிரகாசிக்கும் அதே மெய்ப்பொருள் தான் எவ்விடத்தும், எவரிடத்தும் இருந்து பிரகாசிக்கிறதென்கிற விழிப்பேற்படும்.

இந்த விழிப்பைத் தந்து முறையான பயிற்சி மூலம் முழுமைப் பேறடையச் செய்யும் பெரு நெறியே எளிய முறைக் குண்டலினி யோகம்.

.

முயற்சியளவே ஞான விளைவு :

வித்து, நிலம், உரம், தண்ணீர் காவர்கேற்ப
விளைவுதரும்; அதுபோல உனக்கு ஆசான்
அத்துவித தத்துவ வித்தறிவி லிட்டால்
அதற்கொழுக்கம் என்ற உரம், அறிவை ஒன்றும்
நித்த தவம், ஆராய்ச்சி என்ற தண்ணீர்
நீ சலனமுற்று அறுகுணங்களாகா
வித்தை எனும் காவல், இவையனைத்தும் வேண்டும்
விளைவாக நீயடையும் கனியே ஞானம்". (ஞாக.பா.1483)

தாயுமானவர் வேதாத்திரியார் சிந்தனைகளை ஏற்போம்.
ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 4. தொண்டர்பணி செய்வது என்றோ?

முன்னொரு காலத்தில் வேங்கைபுரி என்ற நாட்டை வேந்தன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவர் தமது நாட்டில் இறைவனுக்காக மிகப் பெரிய ஆலயம் ஒன்றை அமைக்க எண்ணினார்.

இதுவரை எவருமே கட்டியிராதவாறு மிக அழகிய கோயில் கட்டுவதன் மூலம் தமது புகழ் பல்லாண்டு காலம் புகழுடன் விளங்கும் என்பது அவருடைய விருப்பம்.

இதற்காக நாடெங்கிலுமிருந்து கைதேர்ந்த சிற்பிகளை வரவழைத்தார். கோயில் கட்டுவதற்கான கற்களையும் பாறைகளையும் கொண்டு வரச் செய்தார்.

சிற்பிகள் வேலையைத் தொடங்கினர். கல்லுளிகளின் ஓசை கேட்கலாயிற்று. கோயில் வேலை துரிதமாக நடைபெற்று வந்தது.

மன்னன் நாள்தோறும் கோயில் வேலையை வந்து பார்வையிடுவார். நாளுக்கு நாள் கோயில் கட்டும் வேலை வளர்ச்சி பெறுவது கண்டு உள்ளம் பூரிப்படைந்தான்.

பல நாட்களுக்குப் பின்னர் ஒரு வழியாகக் கோயில் கட்டி முடிந்தது. அழகிய கோபுரமும் கோபுரத்தில் உள்ள சிற்பங்களும் பார்ப்பவர் உள்ளத்தைப் பரவசமடையச் செய்யும்படியாக விளங்கின.

மன்னன் இதனைக் கண்டு பூரிப்படைந்தான். கோயில் பணி பூர்த்தியானதும் மிகப் பெரிய சலவைக்கல் ஒன்றில் கோயிலைக் கட்டிய தனது பெயரைப் பொன்னால் பொறிக்கச் சொன்னான்.

அதனைக் கோபுர வாசற்படியில் எல்லோர் கண்களிலும் படும்படியாகப் பதித்து வைக்கச் சொன்னான்.

அன்று இரவு அரசன் தூங்கிக் கொண்டிருக்கும் போது ஒரு கனவு கண்டான். கனவில் இறைவன் தோன்றினார். மன்னன் கட்டிய கோயிலும் தோன்றியது. அதில் மன்னன் பெயர் பொறிக்கப் பெற்ற சலவைக் கல்லும் இருந்தது.

இறைவன் நேரே மன்னன் பெயர் பொறிக்கப்பட்டிருந்த சலவைக் கல்லின் அருகே சென்றார். மன்னன் பெயரை அழித்துவிட்டு வேறு யாரோ ஒரு பெண்மணியின் பெயரை எழுதிவிட்டுச் சென்றார்.

மன்னன் திடுக்கிட்டுக் கண் விழித்தான். நேரே கோயிலுக்குச் சென்றான். சலவைக் கல்லைப் பார்த்தான். அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

ஆம், அவன் பெயர் அழிக்கப்பட்டு யாரோ ஊர் பேர் தெரியாத ஒரு பெண்மணியின் பெயர் அதில் பொறிக்கப்பட்டிருந்தது.

இதைக் கண்ட அரசனுக்கு ஒருபுறம் அவமானமாகவும் மறுபுறம் வேதனையாகவும் இருந்தது.

“இவ்வளவு பாடுபட்டுப் பெரும் பொருள் செலவு செய்து இந்தக் கோயிலைக் கட்டினேன். முடிவில் என்னுடைய பெயர் பொறிக்கப்படாமல் வேறு யாரோ ஒரு பெண்மணியின் பெயர் பொறிக்கப்பட்டிருக்கிறதே! என்று வேதனையடைந்தான்.

காவலர்களை அனுப்பி அந்தச் சலவைக் கல்லில் பெயர் பொறித்துள்ள பெண்மணியை எங்கிருந்தாலும் தேடி அழைத்து வருமாறு கட்டளையிட்டான்.

காவலர்களும் நகர் பூராவும் சுற்றித் திரிந்து கடைசியில் ஊருக்கு ஒதுக்குப்புறம் உள்ள ஒரு குடிசையில் தன்னந் தனியாக வசித்து வந்த ஒரு மூதாட்டியை அழைத்து வந்தனர். அவள் பெயர் தான் அந்தச் சலவைக்கல்லில் பொறிக்கப்பட்டிருந்தது.

அந்த மூதாட்டியைப் பார்த்த அரசன், “அந்தச் சலவைக் கல்லில் பொறிக்கப்பட்டிருக்கும் பெயர் உங்களுடையதுதானா? என்று கேட்டான்.



கிழவி கண்களை நன்கு துடைத்துக் கொண்டு சலவைக்கல்லைப் பார்த்தாள். பிறகு, “ஆம் அரசே அது என்னுடைய பெயர் தான்... தவறுதலாகப் பொறிக்கப் பட்டுவிட்டது போல் இருக்கிறது!”

“இல்லை அம்மா, என் பெயர் தான் முதலில் அந்தச் சலவைக் கல்லில் பொறிக்கப்பட்டது. இறைவனே வந்து என் பெயரை அழித்துவிட்டுத் தங்கள் பெயரை இதில் பொறித்துவிட்டுச் சென்றிருக்கிறார். அதன் காரணம் என்னவென்று எனக்குத் தெரியவில்லை,” என்றான் அரசன்.

“நான் இந்தப்பக்கம் வந்தது கூட இல்லை... அப்படியிருக்க இதில்

என் பெயர் ஏன் பொறிக்கப்பட்டிருக்கிறது?" என்று வியப்புடன் கேட்டாள் கிழவி.

""தாயே, இந்தக் கோயில் பணியில் நீங்கள் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் இறைவன் தங்கள் பெயரை இதில் பொறித்திருக்கமாட்டார். தாங்கள் செய்த தொண்டு என்னவென்று கூறுங்கள்!" என்றான் அரசன்.

நெடுநேரம் யோசனை செய்து பார்த்த கிழவி, ""மன்னா! இந்தக் கோயில் பணிக்காக நான் ஒன்றும் செய்யவில்லை ஆனால், ஒன்று மட்டும் செய்திருக்கிறேன். இந்தக் கோயில் கட்டுவதற்கான கற்கள் மரங்கள் முதலியவற்றை ஏற்றிவரும் வண்டிகள் நாள்தோறும் என்

வீட்டுப் பக்கமாகத் தான் வரும். அந்த சமயத்தில் வண்டியோட்டிகளுக்குத் தாகந்தீரத் தண்ணீர் கொடுப்பேன்; மோர் கொடுப்பேன். குதிரைகளுக்குச் சிறிது புற்களை கொடுத்து தண்ணீர் காட்டுவேன். அவ்வளவுதான் நான் செய்தது," என்றாள் கிழவி.

""தாயே! நான் வெறும் புகழுக்காக இந்தக் கோயிலைக் கட்டினேன். தாங்களோ புகழை விரும்பாமல் தொண்டு செய்தீர்கள். எனவே, தான் என் பெயரை அழித்துவிட்டு இறைவன் தங்கள் பெயரைப் பொறித்துள்ளார். தன்னலமற்ற தங்கள் தொண்டினை இந்தக் கோயிலில் உள்ள சலவைக்கல் என்றென்றும் எடுத்துக் காட்டும். வாழ்க தங்கள் புகழ்!" என்று கூறிய மன்னன், அந்தக் கிழவிக்கு நிறைய பொருள் பரிசாகக் கொடுத்து அனுப்பினான்.

மீடிஇட்ட வாழ்க்கையால் உப்பு இட்ட கலம் எனவும்
மெய் எலாம் உள் உடைந்து,
வீறுஇட்ட செல்வர்தம் தலைவாயில் வாசமாய்
வேதனைகள் உறவேத னு ம

துடியிட்ட வெவ்வினையை ஏவினான். பாவிநான்

தொடரிட்ட தொழில்கள் எல்லாம்
துண்டு இட்ட சாண்கும்பி யின்பொருட் டாயது உன்
தொண்டர்பணி செய்வது என்றோ?,

அடிஇட்ட செந்தமிழின் அருமையிட்டு ஆரூரில்
அரிவைஓர் பரவைவாயில்
அம்மட்டும் அடியிட்டு நடைநடந் தருஂ அளடிகள்
அடிஈது முடியீதென

வடிஇட்ட மறைபேசு பச்சிளங் கிள்ளையே!
வளமருவு தேவைஅரசே!
வரைரா1னுக்கு இருகண் மணியாய் உதித்தமலை
வளர்காதலிப் பெண் உமையே. (ஞாக.பா.581)

- மிகவும் பழைமை வாய்ந்த செந்தமிழ் மொழியில் பெருமையை உணர்த்த, (சந் த ரன் பாட்டுக்கு மயங்கி) திருவாரூரில் பரவைநாநச்சியார் என்னும் ஒரு பெண்ணின் வீட்டு வாயில்வரை கால் பதிந்து நடந்து, சுந்தரனுக்காக அருள் விளையாட்டு செய்தருளிய எம் அடிகளது, அடி இது என்றும், முடி இது என்றும், தெளிவுபடுத்தும் வேதத்தை ஒதுகின்ற பசிய இளம் கிளியே!
- வளம் நிறைந்த ”தேவை” நகருக்கு அரசியே!
- இமையமலை அரசனுக்குக் கண்ணின் மணிபோல் வந்து உதித்தவளும், மலையில் வளர்ந்தவளும், பெற்றோருக்கு விருப்பம் மிகுமாறு வளர்ந்த பெண்ணும் ஆகிய பார்வதி தேவியே!
- வறுமை நிறைந்த வாழ்க்கையால் உப்பிட்ட பாண்டம் போல் உடம்பு முழுவதும் உள்ளே அரித்து இருக்கவும்,
- மிகுந்த செல்வம் உடையவரது வீட்டு வாசலில் மன வேதனையுடன், வாசம் செய்யுமாறு,

- வேதங்களற்ற நான்முகனும் நடுக்கம் கொள்ள ஏதுவாகிய வினையின் வழி, விதியால் ஏவினான்.
- பாவியாகிய நான் தொடர்ந்து செய்த தொழில்கள் அனைத்தும் ஒருசாண் வயிறு வளர்க்க மட்டுமே பயன்பட்டது.
- அல்லாது உன் அடியார்களுக்குத் தொண்டு செய்து, உய்யப் பயன்படவில்லை. அதனால் இனி நான், உய்யும் நாள், எந்நாளோ?

## சமுதாயத் தொண்டு – வேதாத்திரியம்

இளமை நோன்பு, இல்லறம் இரண்டையும் முறையாக ஆற்றியதால் பொருள், இன்பம் எனும் இரு பிரிவுகளைப் பற்றி அனுபவ அறிவு கிடைத்துவிட்டது.

இந்த இரண்டும், உடலையும், அலைந்து திரியும் மனதையும் பற்றிய அனுபவ அறிவு ஆகும்.

மேலும் உயிர், மெய்ப்பொருள் என்னும் இரண்டு மறைபொருட்கள் மனிதன் என்ற இயக்க நிலையத்தில் அடங்கியுள்ளன.

இவற்றையறிந்தால் தான் மனிதன் அறிவு முழுமையாகும். அதற்கு ஆசான் மூலம் உயிர்நிலை உணர்ந்து,

அதன் மேல் மனதைச் செலுத்தி அகநோக்குப் பயிற்சியால் உயிரின் இருப்பு, இயக்கம், விளைவுகள் பற்றிய அறிவைப் பெறும் காலமே வானப்பிரஸ்தம் எனும் அகத்தவப் பயிற்சிக் காலம்.

அகத்தவத்தால் அறிவு முழுமை பெற்று விட்டது. இயற்கையைப் பற்றிய முழு விளக்கமும் வாழ்வின் வளம், நெறிமுறைகள் பற்றியும் அனுபவமான அறிவும் கிடைத்துவிட்டது.

மேலும் அவன் வாழ்நாள் முழுவதும் ஆற்றவுள்ள கடமை என்ன?

தன்னை உருவாக்கி வாழவைத்த சமுதாயத்திற்கு உடல் ஆற்றலையும் அறிவின் விளக்கங்களையும், அர்ப்பணித்து சமூகத் தொண்டு ஆற்ற வேண்டும்.

பழம் பழுத்து விட்ட பின் மரத்திலிருந்து விடுபட்டு வேறுபடுவதைப் போல,

குடும்பம், பொருளுடைமை என்ற இரண்டு சிற்றெல்லைகளிலிருந்து பற்றுக்களை விட்டு மனிதன், இயற்கை, உலகம் என்ற விரிந்த பற்றோடு வாழ்கிறான்.

இந்தப் பொருள், மக்கள் என்ற உரிமை காட்டும் செயல்களுக்குப் பதிலாக விரிந்த மனத்தோடு

உலக மக்கள் அனைவருக்கும் தன்னை உரிமையாக்கி அவன் அறிந்த அறிவின் முழுமைப் பேற்றின் விளக்கங்களை மக்களுக்குப் போதிக்கும் சமுதாயத் தொண்டினைச் செய்து வாழ்கிறான்.

தொண்டில் உயர்வு தாழ்வு வேண்டாம்

"அருள்துறையில் சத் சங்கம் நடை பெறுவதென்றால்
அவரவர்கள் இயன்றவரை தொண்டாற்ற வேண்டும்,
பொருளுடையோர் பொருள் தரலாம் அவர் விரும்பும் அளவில்,
பொதுச் சொத்தே அருள்நாட்டம் கொண்டவர்கட் கெல்லாம்;
அருள் மனத்தால் ஒருவர் பிறரை அடக்கி ஆளும்
ஏற்றத்தாழ் வெதுவும் சத் சங்கங்கட் கொவ்வா;
உருள்உலகில் உருண்ட சங்கம் ஆயிரமாயிரமாம்
உட்பகையால், உண்மை கண்டு நல்லனவே" (ஞாக.பா.1328)

தாயுமானவர் வேதாத்திரியார் சிந்தனைகளை ஏற்போம்.

ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 5 அடியர் நாமமே நான் உச்சரிக்க வசமோ

அப்பூதியடிகள்.. 63 நாயன்மார்களில் முக்கியமானவர்களும் முதன்மையானவர்களாகவும் கருதப்பட்டவர்களில் ஒருவரான திருநாவுக்கரசர் நாயனார் காலத்தில் 7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

சைவ சமயத்தவர்களால் வணங்கப்படும் நாயன்மார்களில் அப்பூதியடிகளும் முக்கியமானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சோழநாட்டில் திருவையாறிலிருந்து 8 கிமீட்டர் தொலைவில் உள்ள திங்களூரில் பிறந்தார். மிகுந்த சிவபக்தியைக் கொண்டவர்.

அந்தணர் குலத்தைச் சேர்ந்தவரான இவர் திருநாவுக்கரசர் சைவ, சமய வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள், அவருக்கு நேர்ந்த துன்பங்கள், இறைவனிடத்தில் அவர் கொண்டிருந்த அன்பு அனைத்தையும் கேள்விப்பட்டு அவரை பாராமலேயே அவர் மீது மிகுந்த பக்திக்கு உள்ளானார்.

அப்பூதியடிகள் வளர வளர அவரையே குருவாக ஏற்று அவரது பெயரில் பல தர்ம காரியங்களைச் செய்து வந்தார்.

ஒருமுறை திங்களூருக்கு வந்த திருநாவுக்கரசர் தன்னுடைய பெயரில் கல்வி சாலைகள், நீர் பந்தல்கள் அமைக்கப்பட்டிருந்ததை கண்டு ஆச்சரியமடைந்தார். யார் இந்த பணியை செய்து வருவது என்று அங்கிருந்தவர்களிடம் கேட்டு அப்பூதியடிகளின் இல்லத்துக்கு வந்து சேர்ந்தார்.

திருநாவுக்கரசரை கண்ட அப்பூதியடிகள் அவர் பாதத்தில் வீழ்ந்து வணங்கினார். அவரை ஆசிர்வதித்து "உனது பெயரில் தர்ம காரியங்களைச் செய்யாமல் வேறு ஒருவர் பெயரில் செய்து வருகிறாயே என்ன காரணம்?" என்று கேட்டார். அப்பூதியடிகளுக்கு மிகுந்த வருத்தமாயிற்று.

"சமணர்களும் மன்னனும் செய்த சூழ்ச்சியைத் தம் தொண்டினால் வென்று எனக்கு குருவாக ஆனவரைப் போய் வேறு

என்கிறீரே? எப்படி இப்படி சொன்னீர்கள். நீரும் சமணரா. அப்படியென்றால் நீவிர் யார்? என்று கேட்டார்.

நான் ஒன்றும் பெரியவனல்ல ஐயா. அதிகைப்பெருமான் கொடுஞ் சூலையினால் ஆட் கொள்ளப்பட்டு சிவனருளை உணர்ந்த சிறியவன் நான் என்றார் திருநாவுக்கரசர்.

இதைக் கேட்டு அளவில்லா ஆனந்தம் கொண்ட அப்பூதியடிகள் நாவுக்கரசரை வீட்டிற்கு அழைத்து வந்து அவருக்கு பாதபூஜை செய்து மகிழ்ந்தார்

தமது வீட்டில் அமுது உண்டு சிறப்பித்து செல்ல வேண்டும் என்று அன்பு கட்டளையிட்டார். அவரது அன்பை ஏற்று அமுது உண்ண திருநாவுக்கரசரும் சம்மதித்தார்.



அமுது தயாரானதும் அப்பூதியடிகள் மகன் திருநாவுக்கரசு நல்ல வாழை இலையைத் தேடி அறுக்கும்போது நாகம் தீண்டியது.

அடிகளார் உணவருந்த நேரம் ஆகிவிட்டதே என்று பதறிய சிறுவன் தாயிடம் விரைந்து வந்து வாழை இலையைக் கொடுத்து மயங்கினான்.

அடிகளாருக்கு அமுதுண்ண நேரமானதால் மகனின் திருமேனி நீலநிறமாக மாறியதை பொருட்படுத்தாமல் அடிகளாரை கவனிக்க ஆயுத்தமானார்கள் அப்பூதியடிகளும் அவர்தம் துணைவியாரும்.

ஆனால் திருநாவுக்கரசர் விபூதி பூசி உடன் அமுதுண்ண அப்பூதியடிகளின் மகன் வரவேண்டும் என்று வலியுறுத்தவே வேறு வழியின்றி நடந்ததை கூறினார்கள்.

அப்பூதியடிகளின் அன்பில் உருகிய திருநாவுக்கரசர் நாகம் தீண்டிய சிறுவனின் உடலை வைத்து ஒன்று கொலாம் என்னும் திருப்பதிகம்

பாடி சிறுவனை உயிர்ப்பித்தார். அப்பூதியடிகளின் சிவனடியாருக்கு செய்த தொண்டு அளவிடமுடியாதது.

பூரணி, புராதனி, சுமங்கலை, சுதந்தரி,
புராந்தகி, த்ரியம்பகி, எழில்
புங்கவி, விளங்குசிவ சங்கரி சகஸ்ரதள
புஷ்பமிசை வீற்றிருக்கும்

நாரணி, மனாதீத நாயகி, குணாதீத
நாதாந்த சத்திஎன்று உன்
நாமமே உச்சரித்திடும் அடியர் நாமமே
நான் உச்சரிக்க வசமோ

ஆரணி சடைக்கடவுள் ஆரணி எனப்புகழ
அகிலாண்ட கோடிஈன்ற
அன்னையே! பின்னையும் கன்னிஎன மறைபேசும்
ஆனந்த ரூப மயிலே!

வாரணியும் இருகொங்கை மாதர்மகிழ் கங்கைபுகழ்
வளமருவு தேவைஅரசே!
வரைராஜனுக்கு இருகண் மணியாய் உதித்தமலை
வளர்காதலிப் பெண் உமையே. (ஞாக.பா.582)

- அத்திமாலை சூடிய சடையை உடைய சிவபெருமான் வேதநாயகி எனப் புகழந்து அழைக்க,
- அண்டகோடிகள் அனைத்தையும் பெற்றெடுத்த தாயே!
- அதன்பிறகும் கன்னித் தன்மை மாறாதவள் என வேதங்களால் பேசப்படும் பேரின்ப வடிவ அழகு மயிலே!

- கச்சு அணிந்த இரண்டு முலைகளுடன் விளங்கும் கங்காதேவியால் மகிழ்ந்து புகழ்ந்து பாராட்டப்பட்ட வளமை நிரம்பிய தேவை நகர் அரசியே!
- இமையமலை அரசனுக்குக் கண்மணி போல் வந்து உதித்தவளும், மலையில் வளர்ந்தவளும், பெற்றோருக்கு விருப்பம் மிகுமாறு வளர்ந்த பெண்ணும் ஆகிய பார்வதி தேவியே!
- "பூரணி, புராதனி, சுமங்கலை, சுந்தரி, புராந்தகி, திரயம்பகி, அழகிய புங்கவி, விளங்கி நிற்கும் சிவசங்கரி, ஆயிரம் இதழ்த் தாமரை மலரின் (சகசிரதளத்தில்) வீற்றிருக்கும் நாரணி.
- மனங்கடந்த நாயகி,
- முக்குண வசப்படாத நாதமுடிவில் விளங்கும் சத்தி" என்று எப்பொழுதும் உமது திருப்பெயர்களையே உச்சரித்துக் கொண்டிருக்கும் அடியார்களது திருப்பெயர்களை நான் உச்சரிக்க அருள் செய்வாயோ?

## தொண்டருக்குச் செய்த தொண்டு செய்த வேதாத்திரியார்

ஒவ்வொரு ஆண்டும் வேதாத்திரி மகரிஷி வட இந்தியா ரிஷிகேஷில் ஏழு நாட்கள் சிறப்புப் பயிற்சி நடத்துவார்கள்.

வால்மீகித் தெருவில் இவருடன் சுமார் பத்து வருடங்களுக்கு மேல் தங்கி தொண்டு செய்த அணுக்கத் தொண்டர் புலவர் தியாகராஜனார் மகரிஷியுடன் சென்று காசி, அலகாபாத், ரிஷிகேஷ் போன்ற இடங்களைப் பார்க்கும் ஆசை ஏற்பட்டது.

வேதாத்திரி மகரிஷி முன்னதாகவே புறப்பட்டுச் சென்று டெல்லியில் ஒரு அன்பரின் வீட்டில் தங்கினார்.

ஒரு வாரம் கழித்து அணுக்கத் தொண்டர் புல வர் தியாகரா ஜனா; ரும் திரு கண்ணன்மணி என்பவரும் டில்லிக்கு செல்ல புகை வண்டியில் பயணித்தார்கள்.

டில்லி நெருங்க நெருங்க இருவருக்கும் திடீரென்று பய உணர்வு ஏற்படுகிறது.

முதன் முறையாக புலவரும் அவரது நண்பரும் செல்வதால், அன்பர்களை புகை வண்டி நிலையத்திற்கு அனுப்பி தங்களை அழைத்துச் செல்ல மகரிஷி ஏற்பாடு செய்திருந்தாலும் அன்பர்களைத் தங்களுக்கும், தங்களை அன்பர்களுக்கும் அடியாளம் தெரியாதே என்ற குழப்பமான எண்ணங்களுடன் ரெயிலிலிருந்து இறங்கினார்கள்.

அங்கே இவர்களை வரவேற்க அன்பர்களுடன் மகரிஷி காத்துக் கொண்டிருப்பதைப் பார்த்து வியப்பும், மகிழ்ச்சியும் அடைந்தார்கள்.

உலக நலத்தொண்டர் தமது சீடர்களுக்கு தொண்டரானதில் வியப்பொன்றும் இல்லையே.

"உருவாகி உடல்வளர்த்து வாழ்கின்றேன்; என்_
உடல்வளர்த்து அறிவூட்டி, வாழ்வதற்கென்னை_
ஒருமனிதனாக்கி வைத்தும் இன்றும் கூட_
உணவுஉடை மற்றும்பல வசதி எல்லாம்_
_தருகின்ற மனிதஇனம்தனக்கு எந்தன்_
சக்திதனைப் பயன்படுத்து கின்றேன் என்ற_
பெருநோக்கச் செய்கையாம் பற்றற்ற வாழ்க்கைப்_
பேரறமே அறிஞனவன் கடமை யன்றோ?_" (ஞாக.பா.970)

தாயுமானவர் வேதாத்திரியார் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 6. எனையாள வல்லையோ?

காட்டில் ஒரு பெருமை வாய்ந்த தேக்கு மரம் இருந்தது.

அது உயரமாகவும் வலிமையாகவும் இருந்தது . மரத்தின் அருகில் ஒரு சிறிய மூலிகை இருந்தது



தேக்கு மரம், "நான் மிகவும் அழகானவன், வலிமையானவன். என்னை யாரும் தோற்கடிக்க முடியாது.

இதைக் கேட்ட மூலிகை, "அன்புள்ள நண்பரே, அதிக பெருமை தீங்கு விளைவிக்கும். வலிமையானவர்கள் கூட ஒரு நாள் விழுவார்கள்.

தேக்கு மூலிகையின் வார்த்தைகளை புறக்கணித்தது.

அது தொடர்ந்து தன்னைப் புகழ்ந்து கொண்டது . பலத்த காற்று வீசியது. தேக்கு உறுதியாக நின்றது. மழை பெய்தபோதும், தேக்கு அதன் இலைகளை விரித்து வலுவாக நின்றது.

இந்த காலங்களில், மூலிகை தாழ்ந்தது. தேக்கு மூலிகையை கேலி செய்தது.

ஒரு நாள், காட்டில் ஒரு புயல் ஏற்பட்டது. மூலிகை தாழ்ந்தது. வழக்கம் போல, தேக்கு வணங்க விரும்பவில்லை.

புயல் வலுவடைந்து கொண்டே இருந்தது. தேக்கால் புயலின் தாக்குதலை தாங்க முடியவில்லை.

அது தனது வலிமையை இழந்தது . அது நிமிர்ந்து நிற்க முயன்றது ஆனால் இறுதியில் அது கீழே விழுந்தது. அதுவே பெருமைமிக்க மரத்தின் முடிவு.

எல்லாம் மீண்டும் அமைதியாக இருந்தபோது, மூலிகை நேராக நின்றது. மூலிகை சுற்றிலும் திரும்பி பார்த்தது . பெருமை வாய்ந்த தேக்கு விழுந்திருப்பதைக் கண்டது.

"மோகம், மதம், குரோதம், லோபம், மாச்சரியம் முதலியன அடிமை ஓலை எழுதி, என்னை அந்த ஆணவத்தால் தேக்குமரம் போல்

மனம் அடிமை கொள்கிறதே” என்று வருந்துகிறார் தாயுமானவர் இந்தப்பாடலில்

பாகமோ பெறஉனைப் பாடஅறியேன் மல
பரிபாகம் வரவும் மனதில்
பண்புமோ சற்றும் இலை நியமமோ செய்திடப்
பாவியேன் பாபரூப

தேகமோ திடம் இல்லை ஞானமோ கனவிலும்
சிந்தியேன். பேரின்பமோ
சேரஎன்றால் கள்ள மனமோ மெத்தவும்
சிந்திக்குது என் செய்குவேன்?

மோகமோ, மதமோ, குரோதமோ, லோபமோ,
முற்றுமாற் சரியமோதான்
முறியிட்டு எனைக்கொள்ளும் நிதியமோ தேடஎனில்
மூசுவரி வண்டுபோல

மாகம் ஓடவும் வல்லன் எனையாள வல்லையோ?
வளம் மருவு தேவைஅரசே!
வரைராஜனுக்கு இருகண் மணியாய் உதித்தமலை
வளர்காதலிப் பெண்உமையே. (ஞாக.பா.583)

